Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | தை 05 | (18-01-1994) | செவ்வாய்க்கிழமை | ஓசை 334

## கதிரியக்கமுடைய பால்மா இறக்குமதி விசாரிக்க ஆணைக்குழு நியமனம்

நெஸ்லேகம்பனியரல் இறக்குமதிசெய்யப்பட்ட கதிரியக்கம் கலந்த பால்மா குறித்து விசாரணைமேற்கொள்ள தனிநபர்ஆணைக்குழு ஒன்றை விவசாய அபிவிருத்தி அமைச்சர் தர்மதாஸ பண்டாரா நியமித்துள்ளார். கதிரியக்கம் கலந்த பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கஅதிகாரிகள் கண்டுபிடித்ததைஅடுத்து கொழும்பு ஆங்கிலத் தினசரிகள் நவம்பர் 28, 1993இல் இதுசம்பந்தமான செய்திகளை வெளியிட்டன. காலி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஹேமகுமார நாணயக்காரா வரவு செலவுத் திட்ட விவசாய அபிவிருத்தி அமைச்சு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது கதிரியக்கம் கலந்த பால்மா குறித்த விசாரணை ஒன்று மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார், அது தொடர்பாகவே இந்த நடவடிக்கை.

# கிட்டு வந்த 'அகத்' கப்பலின் மாலுமிகள் மீது வழக்குதாக்கல்

## விசாகபட்டின விசேட நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை நேற்று சமர்ப்பிப்பு

(சென்னை)

**கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வங்கக் கடலில், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு பயணம்செய்த 'எம். வி. அகத்' என்ற கப்பலில் இருந்து உயிர் தப்பிய ஒன்பது கப்பல் மாலுமிகள்மீது இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு குற்றப்பத்திரிகை தாக்கல்செய்துள்ளது. விசாகபட்டினத்தில் நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் இக்குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளது. இந்திய குற்றச்சட்டம், தடா சட்டம் என்பனவற்றின்கீழ் இக்குற்றப்பத்திரிகை தாக்கலாகியுள்ளது.**

சிங்கப்பூரில் 'எம். வி. ஜகார்தா' என பதிவு செய்யப்பட்ட இக்கப்பல் புலிகளுக்கு சொந்தமானதுஎனவும் 'எம். வி. அகத்' என்ற பெயரில் பயணம் செய்தது எனவும் புலன்விசாரணையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக குற்றப்பத்திரிகை கூறுகிறது.

கடலுக்கடியில் இருந்து மீட்கப்பட்ட உடைந்த கப்பலின்பகுதிகளும் ஆயுதங்களின் எஞ்சிய பகுதிகளும் இவ்வழக்கில் முக்கிய சான்றுகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

கப்பலைச் சோதனையிடுவதற்கு கரைக்காவல் கப்பலுக்குச் சட்டப்படி இருந்த உரிமையை ஏற்க கப்பலின் தலைவர் மறுத்து எதிர்ப்புக் காட்டினார் என குற்றப்பத்திரிகை கூறுகிறது. கிருஸ்ணகுமார் என்ற கிட்டு உட்பட கப்பலில் இருந்தவர்கள் கப்பலுக்குத் தீ வைக்க தீர்மானித்தார்கள். சென்ற ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி இந்தக் கப்பல் சென்னையிலிருந்து எட்டு கடல் மைல்கள் தூரத்தில் நங்கூரம் இட்டிருந்த போது, குற்றம் சாட்டப்பட்டிருந்த 9பேர் கடலில் குதித்தார்கள். இவர்களை இந்திய கடற்காவல் படையின் ஹெலிக்கொப்டர்கள் மீட்டன என் கூறப்படுகிறது.

சதி செய்ததாகவும் வெடிமருந்துகளைத் தவறாகப் பயன்படுத்தியதாகவும்பொது ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாமல் தடுத்ததாகவும் ஆயுதங்கள் ஏற்றியகப்பலுக்குத் தீவைத்து அதை மூழ்கடித்து 'பயங்கரவாத'ச் செயல்கள் செய்ததாகவும் இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கிட்டு உட்பட்ட 10 பேர் எரிந்துகொண்டிருந்த கப்பலிலேயே இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒன்பது பேரில் நாயகன் என்னும் ஒருவர்மீது கப்பலில் இருந்த பெற்றோல் பீப்பாக்களுக்கு தீவைத்ததாக தனியாக ஒரு குற்றச்சாட்டும் கூறப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான

## இலவச பாடப்புத்தகங்கள் எடுத்து வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரும் பணி பல மாதங்கள் தாமதமடையும் எனத் தெரியவருகிறது. இப்பாடநூல்களை அச்சிடுவதில் ஏற்பட்ட கால தாமதமும் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான பாடநூல்களின் தொகையை உரிய நேரத்தில் கல்விச் சேவைகள் அமைச்சு பெற்றுக்கொள்ள முடியாமல் போனமையும் இதற்குமுக்கிய காரணமாக அமைந்தது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யாழ். குடாநாட்டிற்கான கப்பல் சேவையை அரசாங்கம் திட்டமிட்டு சீர்குலைத்துவருவதால் பாடப் புத்தகங்களைக் கப்பல்மூலம் எடுத்துவருவதில் மேலும் தாமதமாகும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன

யாழ் குடாநாட்டிற்கு இலவசப் பாடப் புத்தகங்களை அனுப்புவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மட்டுமே தற்போது கல்விச்சேவைகள் அமைச்சு மேற்கொண்டுவருவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (நி)

அகதிகளுக்கான

## ஐ. நா. உயர் அதிகாரி நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸ் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவர் இங்கு தங்கியிருக்கும் வேளை மடு அகதி முகாம் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார்.

பீற்றர் நிக்கலஸ் யாழ்ப்பாணத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்கள் தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தியாவசிய பொருள் எடுத்துவருவதற்கு

## இல. செஞ்சிலுவை மீது இராணுவம் கெடுபிடி

(கொழும்பு)

வடபகுதிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அத்தியாவசியப் பொருள்களை கொண்டு செல்வதில் பலத்த இராணுவக் கெடுபிடிகள் எதிர்நோக்கப்படுவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஹீன்தெனிய தெரிவித்துள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று கடந்த வாரம் அநுராதபுரத்தில் நடைபெற்றது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா உட்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

## றுகுணு வந்தடைந்தது

(வடமராட்சி)

'றுகுணு' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. இக்கப்பலில் யாழ். செயலக

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தாக்குதலின் போது தூங்கிய அதிகாரி

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்ட போது இராணுவ உயர் அதிகாரியொருவர் அங்கு தூங்கிக்கொண்டிருந்ததாக இச்சம்பவம் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தாக்குதலின் முதல் ஒன்றரை மணிநேரமாக இவர் தூக்கத்திலேயே இருந்தார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கனேடிய நல்லெண்ண குழுவிடம்

## கிழக்கில் வேட்பாளருக்கு

## மாணவருக்கான சீருடை 3-ம் தவணை கிடைக்கும்

## கிழக்கில் வேட்பாளருக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் போட்டியிடவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளர்கள்பலருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அப்துல் மஜீத்தின் அம்பாறையில் உள்ள வீடு மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிரதேச சபை வேட்பாளர் திரு. எஸ். கணேசமூர்த்தியை சந்தித்த இருவர் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று எச்சரிக்கைசெய்துள்ளனர். வாழைச்சேனையில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் திரு. முகமது என்பவரின் வீட்டுக்கு கடந்த புதன் கிழமை அதிகாலை சென்ற 5 பேர் தேர்தலில் போட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல்கிட்டு நினைவுதினம் மன்னாரில் அனுஷ்டிப்பு

(மன்னார்)

வங்கக்கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு, லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்பட பத்து மாவீரர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் மன்னாரில் கொண்டாடப்பட்டது

அடம்பன் பகுதியில் கறுக்காய் குளத்தில் மாவட்ட ரீதியாக இந்நினைவு கூரல் இடம் பெற்றது. இதன்போது கேணல்கிட்டு உட்படப் பத்து மாவீரர்களது உருவப்படங்களையும் தாங்கிய அகத் கப்பலின் மாதிரி பண்டி விரிச்சானில் இருந்து மடுவழியாக முருங்கன் மக்களின் அஞ்சலிக்காகக்கொண்டுவரப்பட்டது. இறுதியாக வட்டக்கண்டலில் இருந்து பொதுமக்கள் போராளிகளுடனும் பாண்ட் வாத்தியக்குழுவுடனும் இவ்வூர்தி கறுக்காய் குளத்தை வந்தடைந்தது இரவு 7.30 மணியளவில் நினைவு தினக் கூட்டம் அடம்பன், நானாட்டான் பகுதி இணைப்பாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கனேடிய நல்லெண்ண குழுவிடம்

## பொருளாதார தடையை நீக்க உதவுமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதோடு தினமும் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கையையும் உடனே நிறுத்துமாறு கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கனேடிய நல்லெண்ணக் குழுவிடம் கேட்டுள்ளது

கிளிநொச்சி வந்துள்ள கனேடிய குழுவை இணையத்தின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசிய போதே இவ்வாறு கோரப்பட்டது. அத்துடன் 'உள்நாட்டுப் போரும் மக்களின் வாழ்க்கை நிலையும்' என்ற தலைப்பில் மகஜர் ஒன்றும் கனேடிய குழுவிடம் கையளிக்கப்பட்டது.

## சுவிஸிலிருந்து ஒருதொகுதி அகதிகள் மார்ச்சில் அனுப்பப்படுவார்கள்

(கொழும்பு)

அரசியல் தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பியனுப்பும் சுவிட்சர்லாந்தின் புதிய நடைமுறையின்படி எதிர்வரும் மார்ச் மாதம் முதற்கட்டமாக ஒரு தொகுதியினர் இலங்கை திருப்பியனுப்பப்படவுள்ளனர்.

சுவிசிலிருந்து திருப்பியனுப்பப்படும்அனைவருக்கும்மூன்று மாத ஊதியம் வழங்கப்படும் என சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் அனைவருக்கும் இலங்கைக் கடவுச் சீட்டும் வழங்கப்படும். இவர்கள் இலங்கை வந்து சேரும் பட்சத்தில்இம்சிக்கப்படமாட்டார்கள் என உறுதிப்படுத்த யூ.என் எச்.சி.ஆர் கண்காணிப்பில் ஈடுபடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது

இந்நடவடிக்கைகள் அரசியல் தஞ்சம்கோரி சுவிஸ் வருபவர்களைச் சிந்திக்கச் செய்யும். இதனால் அங்கு வருபவர் எண்ணிக்கை குறையுமென சுவிஸ் அரசு கருதுகிறது.

## வீரச்சாவு



**லெப். வெற்றிவேல்**

பூநகரிப் பகுதியில் கடந்த 15-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3-ம் தவணை கிடைக்கும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக்கான துணிகள் இவ் வருடம் மூன்றாம் பாடசாலைத்தவணையின் போது வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. வேரகொட கல்வி அமைச்சில் வைத்துப் பாடசாலை சீருடைக்குத் தேவையான துணி வகைகளை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வது தொடர்பாக இலங்கையிலுள்ள சீனத் தூதுவருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கல்வி அமைச்சரிடம் கேட்டபோது விவரங்களை இப்போதே வெளியிட முடியாதென்று தெரிவித்தார்.

1994-ம் ஆண்டு இலங்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

எலும்புக் கூடுகளை அடையாளம் காட்டிய

## உறவினர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளை அடையாளம் காட்டிய மூவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் காணாமல் போனவர்களின் பெற்றோருக்கும் கடிதம் மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய எலும்புக் கூடுகளையும் அடையாளம் காட்டுவதற்கு அவர்களின் பெற்றோர், உறவினர்கள் தயங்குகின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து அடையாளத்தை உறுதிப்படுத்தல் விசாரணைக்கான திகதியை நீதிமன்றம் ஜனவரி 24ஆம் திகதிவரை ஒத்தி வைத்துள்ளது.

## கடவுச்சீட்டு மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் இத்தாலியில் கைது

(கொழும்பு)

இத்தாலியிலும்நியூசிலாந்திலும் கடவுச்சீட்டு மோசடியில் ஈடுபட்ட 50 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்ரபோல் கொழும்பிற்கு அறிவித்துள்ளது. கைதான இவர்களில் தமிழ் இளைஞர்களும், சிங்கள இளைஞர்களும் அடங்குகின்றனர்.

தமிழ் இளைஞர்களில் சிலர் சிறிலங்கா பொலிசாரினால் தேடப்பட்டவர்கள் என சி. ஐ. டி பிரிவினர் தெரிவித்துள்ளனர். கைதான இந்த இலங்கையர்கள் அந்நாட்டு நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படவுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து தம் நாட்டினுள் நுழையும் இலங்கையர்கள் குறித்து இத்தாலி, நியூசிலாந்து அதிகாரிகள் விழிப்பாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## சூரியகந்த எலும்புக்கூடு மாணவருடையது அல்ல

### சி. ஐ. டியினர் அறிவிப்பு

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் காணாமற் போன எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்களுடையது அல்ல என சி.ஐ.டி பிரிவினர் அறிவித்துள்ளனர். இதற்கான சகல ஆதாரங்களும் தம்மிடம் இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதே சமயம் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் நீதிமன்ற விசாரணைக்காக கடும் பொலிஸ் பாதுகாப்பின் மத்தியில் கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்ட எலும்புகளும் இரத்தக்கறை படிந்த துணிகளும் நீதிமன்றத்தில் மக்கள் அடையாளம் காட்டுவதற்காக அங்கு வைக்கப்படவுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### SPOKEN ENGLISH

SPoken English, பொது உளச்சார்பு, பொது அறிவு, மொழித்திறன் கற்பிக்கப்படு கிறது. V.N. கந்தசாமி, திருநெல்வேலி ,றோட், கொக்குவில். (7254)

### வெள்ள அகதிகளுக்கு உதவி

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்து பொது இடங்களில்தங்கியிருந்த சுமார் 2500 குடும்பங்களுக்கு கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் வரையப்பட்ட செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழர் புனர் வாழ்வு கழகத்தினால் 1, 50, 000 ரூபா பெறுமதியான பாய் மற்றும் படுக்கை விரிப்பு,உடுபிடவைகள் என்பன தற்போது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளில் கீழைத்தேச சங்கீத நடன மற்றும் சித்திர ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை சபையினால் கோரப்பட்டுள்ளன அத்துடன் நீதியமைச்சின் கீழ் தொழில் நியாயசபைகளின் பேச்சுப் பெயர்ப்பாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இவ் இரண்டு வெற்றிடங்களிற்குமான விண்ணப்ப மூடிவுத்திகதி இம்மாதம் 24ஆம் திகதி ஆகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை எமது காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள வர்த்தகமானியில் பார்வையிடலாம்.

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

தொல் புரம் கொட்டடியம் பதி அருள் மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் கோவிலின் பரிபாலன சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை பரிபாலன சபையின் தலைவர் திரு. சி. முத்துராசா தலைமையில் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3. 00 மணிக்கு நடைபெறும். (24)

### பழுதடைந்த நிலையில்

## விவேகானந்தர் நினைவுப் பேச்சுபோட்டி நடத்தபணிப்பு

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் ஆதரவுடன் இராமகிருஷ்ணாலயம் ஒழுங்கு செய்துள்ள சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ பிரசங்க நூற்றாண்டை ஒட்டிய மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் போட்டியை யாழ். கல்வித்திணைக்களம் நடத்தவுள்ளது. பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் நான்காம் திகதிக்கு முன்பாகவும், கோட்ட மட்டத்தில் எதிர் வரும் பதினாறாம் திகதிக்கு முன்பாகவும் இப்போட்டிகள் நடத்துவதற்கு ஒழுங்குகளை செய்யும்படி சகலபாடசாலை அதிபர்களையும், கோட்டக் கல்விப் பிரதிப் பணிப்பாளர்களையும் யாழ். கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி பணித்துள்ளார். மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 25-ம் திகதி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம்

19-1-1994 புதன்கிழமை

மாலை 5.00 மணி

தலைமை:- என். கே. குலசிங்கம்
(தலைவர், நல்லூர் பிரதேச வர்த்தகர்சங்கம்)

பிரதம விருந்தினர்கள்:-
திரு. திருக்குமரன் (அரசியல் பொறுப்பாளர் வலிகாமம்)
திரு. வேந்தன் (சதீஸ்) (பொறுப்பாளர் நல்லூர் வட்டவை)
திரு. இமையவன் (பொறுப்பாளர் தொழிற் சங்கம்)

நிகழ்ச்சிகள்

தேசியக்கொடியேற்றல்:- திரு. திருக்குமரன்
மௌன அஞ்சலி
மங்கள விளக்கேற்றல்:-
திரு. செ. கணேசராசா (கணேசன் களஞ்சியம் திருநெல்வேலி)
திரு. இ. காந்தரூபன் (ரூபன் களஞ்சியம் திருநெல்வேலி)
தமிழ்த்தாய் வாழ்த்து:- திரு. பொன். சுந்தரலிங்கம்
மங்கள இசை:- தவில் மேதை அமரர் N. R. சின்னராசாவின் புதல்வர்கள் ரவி, சுதா குழுவினர்.
தலைமையுரை:
வரவேற்புரை:- திரு. க. தியாகராசா
(பொருளாளர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

பிரதம விருந்தினர்கள் உரை

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

நன்றியுரை:- திரு. காசி விஸ்வநாதன்
(உபதலைவர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

கெஞ்சிற் கச்சேரி

நாதஸ்வரக் கலாநிதி N.K பத்மநாதன் நாதஸ்வரம்
இசைஞான திலகம் V.R ராதாகிருஷ்ணன் வயலின்
இசைக்கலா வித்தகர் K. கண்ணதாசன்

## பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகத்தின்பங்களிப்புதேவை

சி. வேலாயுதம்

''ஒரு பாடசாலை மாணவர்களது கல்வி வளர்ச்சி அப்பாடசாலையினது முறைசார்ந்த பாடத்திட்டத்தில் மட்டும் அமைந்ததாக இருந்துவிடமுடியாது. மாறாக கல்லூரியின் நன்கு திட்டமிடப்பட்ட இணைப்பாடவிதான நடவடிக்கைகளிலுமே தங்கியுள்ளது. அதுபோன்று பாடசாலையினது பொதுவான வளர்ச்சியென்பது வெறுமனே கல்வித்துறையில் மட்டுமன்றி பாடசாலைச் சமூகம் அப்பாடசாலையில் கொண்டுள்ள ஈடுபாட்டிலும், அக்கறையிலும், இடைவிடாத தொடர்பிலுமே தங்கியுள்ளது. பழைய மாணவர்களும், பெற்றோர்களும் பாடசாலை மீது கொண்டிருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கையினாலேயே இத்தொடர்பினை வளர்த்தெடுக்க முடியும். இந்த வகையில் இக்கல்லூரியானது இத்தகைய தொடர்பினை இறுக்கமாகக் கொண்டுள்ளதால் ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ் நிலையில் கல்லூரி ஒரு குறுகிய காலத்தில் நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது''

இவ்வாறு அண்மையில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் வடக்குவலயத் திட்டமிடல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

'இக்கல்லூரியின் மாணவர்களுக்குப் பலவித புலமைப்பரிசில் திட்டத்தைப் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றது. பாடசாலையின் பரிசளிப்பு விழா போன்ற நடவடிக்கைகளுக்குப் பரிசளிக்கும் புத்தகங்களைப் பெற்று பெருமளவில் உதவி செய்துள்ளது. பாடசாலையின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக உதவிகள் பல செய்துள்ளது அத்தோடு பாடசாலையை அழகுபடுத்த பலவித நடவடிக்கையைச் செய்துள்ளது என்றார்.

### பாஷையூருக்கு புதிய பங்குத் தந்தை

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் புதிய பங்குத் தந்தையாக அருட் திரு எஸ். ஜெயக்குமார் அடிகளார் கடந்த 10 ஆம் திகதி திங்கட் கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். (24)

பனை அபிவிருத்திச் சபை,

சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்

## பதவி வெற்றிடம்

### விண்ணப்பமுடிவு திகதி நீடிப்பு-26- 01-1994

19-11-1993-ந் திகதி ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த மேற்படி பதவி வெற்றிடம் சம்பந்தமான விளம்பரத்திற்கமைய, தகுதியுள்ளோர் 26-01-94 வரை விண்ணப்பம் செய்யலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

- பனை அபிவிருத்திச்சபை

(சி- 8401)

## வங்கக் கடலில் ஓர் வீரகாவியம்

பொங்கிய தமிழர் வாழ்வில் புறமுது இல்லையென்றே தங்கமாம் மேனிதன்னைத் தழலதாய்க் கொண்ட வீர


## பாடசாலை உபகரணங்கள் உலக தரிசனம் அன்பளிப்பு

(தென்மராட்சி)

கொடிகாமம் தெற்கு கிராம அபிவிருத்தி சங்க எல்லைக்குட்பட்ட வறிய பாடசாலை மாணவர்களுக்கு உலக தரிசன நிறுவனம் பாடசாலை உபகரணங்களை வழங்கியது.

இப்பாடசாலை உபகரணங்களானபுத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் போன்றவை கடந்த 9-ம் திகதி கொடிகாமம் கிராம அபிவிருத்தி சங்கத்தில் வைத்து 500 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ் வைபவத்தில் யாழ் மாவட்ட உலக தரிசன இணைப்பாளர் திரு. பெ. குணரத்தினம் அவர்களும் பகுதி உலக தரிசன உறுப்பினர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்களும் கிராமசேவை உத்தியோகத்தர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர் (86)

## கண்ணீர் அஞ்சலி



### நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

(கலைவாணி நகைமாளிகை உரிமையாளர்)

நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டு இருந்த வேளை எனக்கு உதவி அளித்து என் தொழிலுக்கு ஒரு நிரந்தர இடமளித்து என்னை ஊக்குவித்து என்னையும் மனிதனாக்கிய என் அன்புத்தெய்வமே உம் திடீர் மறைவால் ஏங்கி நலிந்து கொண்டிருக்கும் வேளையில் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

கிருபாநகை மாளிகை உரிமையாளரும் ஊழியர்களும். (7256)
மு கிருபாலன் (மருமகன்)

## நினைவு கூருகின்றோம்...

### 1994-01-18

1986ஆம் ஆண்டு திருகோணமலை - நிலாவெளி வண்டியிறக்கம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய -

**பாருக்-சாள்ஸ்** (சிங்கராசா மரியதாஸ் - லிங்க நகர் - திருகோணமலை)

1987ஆம் ஆண்டு மட்டு - வாகரை, கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புகுந்திருந்து

நடைபெறும். (24)

## பழுதடைந்த நிலையில் போக்குவரத்து வீதி

சித்தன்கேணி சந்திக்கும் வட்டுக்கோட்டை சந்திக்கும் இடையேயான பிரதான வீதி நீண்ட காலமாகத் திருத்தம் செய்யப்படாததால் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியில் பாரிய குழிகள் ஏராளமாக இருப்பதால் பொது மக்கள் கால் நடையாகவோ, வாகனங்கள் மூலமோ பிரயாணம் செய்வதில் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

---

இலங்கை ... தலகம் V.K. ராதாகிருஷ்ணன்
வயலின்
இசைக்கலா வித்தகர் K. கண்ணதாசன்
மிருதங்கம்
தவில் வித்துவான் P. முருகதாஸ்
தவில்
வித்துவான் சதா வேல்மாறன்
தபேலா
வித்துவான் P. ரதிரூபன்
கடம்

மெல்லிசை

S.G. சாந்தன் குழுவினர்
பார்வதி சிவபாதத்துடன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.

(8381)

---

பொங்கிய தமிழர் வாழ்வில் புறமுது இல்லையென்றே
தங்கமாம் மேனிதன்னைத் தழலதாய்க் கொண்ட வீர
வேங்கைகள் நினைவாய் இன்று வீரமாய்ச் சூளுரைப்பம்.
எங்களின் கிட்டு மாமா! ஏனைய வேங்கைவீர!!
வங்கத்துக் கடல் மீதுங்கள்வரலாற்றுச் சான்றுவைக்கப்
புறப்படும் வீரவேங்கை புதுப்-பரணியொன் றெழுதி மீளப்
படையணி கொள்வோம் வாரீர் பகைதனை
முடிப்போம் பாரில்.

கேணல் கிட்டுவிற்கும்,
ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்

சேரன் போக்குவரத்துச் சேவை
சேரன், சிவராஜா
நெல்லியடி வடமராட்சி (750)

(7253)

---

... நகர் - திருகோணமலை)

1987ஆம் ஆண்டு மட்டு - வாகரை, கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய -

**லெப். இந்திரன்** (இராசதுரை கோணேஸ்வரன்- 7-ம் வட்டாரம், மூதூர் - திருகோணமலை)

**2-ம் லெப். றஜனி** (சங்கரமூர்த்தி உதயகுமார் - சம்பூர் - திருகோணமலை)

1989ஆம் ஆண்டு திருகோணமலை - தம்பலகமம் பட்டிமேட்டுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எமைப் பிரிந்த -

**2-ம் லெப். ரகு** (ஆறுமுகம் அமிர்தலிங்கம் - தம்பலகமம் - திருகோணமலை)

நல்லதண்ணீர்த்தொடுவாயில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மாதவன்** (கனகசிங்கம் இராகுலசிங்கம் - மிருசுவில் வடக்கு, கொடிகாமம் - யாழ்)

யாழ் - நெடுந்தீவுப் பகுதியில் படகு மூலம் வந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்,

1992ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1993ஆம் ஆண்டு திருமலை - புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர்,

**மேஜர் அருண்மொழி-கௌதமன்-நிசாம்** (சுப்பிரமணியம் சத்தியேந்திரன் - திருமலை)

**கப்டன் செல்வக்குமார்-சுகுமார்** (இரத்தினசிங்கம் ராகவன் - மூதூர் - திருமலை)

**கப்டன் வீணைக்கொடியோன்-வர்ணன்** (சண்முகலிங்கம் விஜயன் - தம்பலகமம் - திருமலை)

**லெப். கார்வண்ணன்-ஒஸ்னஸ்** (பொன்னுக்கோன் செல்லக்கோன் - நிலாவெளி - திருமலை)

**லெப். காண்டீபன்** (கனகரத்தினம் செல்வராசா - முள்ளிப்பொத்தானை - திருமலை)

**பிரியன்** (இருதயநாதன் மல்கம் கோல்சீர் - லிங்க நகர் - திருமலை)

**இளவேனில்-துஷரன்** (தில்லையம்பலம் ரவிநாதன் - தம்பலகமம் - திருமலை)

**இளவரசு-ரவிகாந்** (இராசரட்ணம் சிவனேசன்- பள்ளிக்குடியிருப்பு - திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8398)

---


## உறுதியான கணணிக் கல்விக்கு

வெலிங்டன் சந்திக்கருகில்



# UNIKCO

## COMPUTER CENTRE

- WORD PROCESSING (Word Star Rel 5· 5) and MS - DOS
- dBASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- BASIC LANGUAGE (Including Graphics, Sounds and Files)
- DATA ENTRY OPERATOR TRAINING

COMPUTER துறை சம்பந்தப்பட்ட சகல இலவச ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் நேரம் வீணாவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**

**21-01-94 (வார நாட்கள்)**

**22-01-94 (வார இறுதி நாட்கள்)**

அலுவலக நேரம்:

காலை 9-00 — 12-00 மணி வரை
மாலை 2-00 — 5-00 மணி வரை

மேலதிக விபரங்கட்கு:

**UNIKCO COMPUTER CENTRE**
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(சி-8399)


---

## 31-ம் நாள் நினைவலைகள்

மலர்வு: 01-10-1974



உதிர்வு: 19-12-1993

செல்வி

## பொன்னுத்துரை கமலாதேவி

திதி: 18-01-94

பாசமிகு மலரேயெம் பண்புள்ள கமலாவே!
நேசமுறு சோதரரும் அன்னையும் நினைவிழந்து
வாசமிகு மலர்கருகிச் சருகானதேயென்று
ஈசனே எம்மலரை உனது திருவடியில்
சேர்ப்பாய் எனவேண்டி நிற்கின்றோம் அம்மாவே
ஆர்த்த பிறவித் துயரத்தை நீக்கியே
ஈர்த்திடுவாய் உன்பால் எனவே இறைஞ்சுகின்றோம்
பார்புகழ பேர்விளங்க பதமினை சேர்வாயே!
ஆனந்த மழையில் சிறகடிக்கும் இளமைப்பருவம்
வாட்டுதம்மா எம்மையெல்லாம்.

உன் பிரிவால் துயருறும்

ஐயன் கோவிலடி,
கொடிகாமம்.

தாயார் குஞ்சம்மா,
சகோதரர்கள்.

(7252)

## சிந்தனைக்கு

அன்போ - பகைமையோ அரசியல்வாதிகளுக்குக் கிடையாது. அரசியல்வாதிகள் உசிதப்படி நடப்பார்களே ஒழிய உணர்வின்படி அல்ல.

-- செஸ்ட்டர்ஃபீல்ட் பிரபு


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## அரசின் அக்கறை போரில் மட்டுமோ?

இனப்பிரச்சினைக்கு 'அரசியல் தீர்வு' என்பது சிறிலங்கா அரசாங்கத்தின் சிந்தனையில் சிறிதளவேனும் இருப்பதாக இல்லை, அரசியல் தீர்வு என்ற அதன் பேச்சுக்கள் யாவும் போலியானவை. வாக்கு வேட்டைக்கான தந்திரங்கள். இதில், சிறிலங்காவின் ஜனாதிபதியோ, பிரதம மந்திரியோ யாராக இருந்தாலும் விதிவிலக்கானவர்கள் அல்ல. இவர்கள் யாவரின் எண்ணங்களில், சிந்தனையில், நடைமுறையில் இருப்பவை எல்லாம் இராணுவத் தீர்வே.

இதன் வெளிப்பாடே மீண்டும் இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் அழைக்கும் சிறிலங்கா அரசின் முயற்சிகளாகும். இம்முயற்சி, தோல்வியா? வெற்றியா? என்ற விவகாரத்தை விட சிங்கள அரசியல் வாதிகளின் சிந்தனையும், செயற்பாடுகளினதும் குறிக்கோள் பற்றிய அளவீடாகும்.

கடந்தமுறை 1987இல் இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாட்டின் மூலம், இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தமையும், அதன் விளைவாக இலங்கையில் ஏற்பட்ட இரத்தக்களரியையும் அரசாங்கம் மறந்துள்ளமை தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு எந்த விலை கொடுக்கவும் அது தயாராக இருப்பதையே காட்டுவதாகவுள்ளது.

அதாவது, கடந்த முறை இந்திய இராணுவம் இலங்கைக்குள் புகுந்ததன் விளைவு வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் இரத்த ஆறு ஓடக் காரணமாக இருந்தது. 60,000 - 1,00,000 இடைப்பட்ட சிங்கள இளைஞர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்காமல் போனது. இவ்விவகாரம் இன்றும் தீராததோடு, புதைகுழிகளில் இருந்து வெளிவரவும் தொடங்கியுள்ளது.

ஆளும் ஐ. தே. க. அரசாங்கம், அதைக் கருத்தில் கொள்வதாகவோ அன்றி இனிமேலும் அவ்வாறானதொரு நிலை உருவாவதைத் தடுக்க முற்படுவதாகவோ தெரியவில்லை. தமிழ் மக்களின் புதைகுழியில் இருந்து மட்டுமல்ல, சிங்களவர்களின் புதைகுழி மீது நின்றாவது தனது ஆட்சி அதிகாரத்தைக் காப்பாற்ற

# சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பிற்கு முகம் கொடுக்கமுடியாத கட்சிகள்

### இனப்பிரச்சினை தீராமைக்கு காரணம் அதுவே

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் தெற்கு இனவாதிகளின் எதிர்ப்புக்கு நேரடியாக முகம் கொடுக்க அரசியல் வாதிகளுக்கு முடியாதுள்ளமையே என சிறிலங்கா கலை கலாசார மன்ற அமைப்பின் பிரதம அமைப்பாளர் சுனில் விஜே சிறிவர்த்தன தெரிவித்தார்.

இவர் அண்மையில் வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பாக புத்தி ஜீவிகள் மாநாட்டையும் வடக்கு - கிழக்கு பொருளாதார அமைப்பு போன்றவற்றின் மாநாடுகளை ஒழுங்குசெய்தவர். இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கு, மற்றும் தெற்கிலும் வாழும் தமிழ் மக்கள் மீது இன்று யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது இதனை இல்லாமல் செய்வதற்கு பத்திரிகையாளர் கலை இலக்கிய வாதிகள், புத்திஜீவிகள் பங்களிப்பு மிக முக்கியமானது.

தெற்கிலுள்ள சிங்கள மக்கள் மீது தமிழ் மக்கள் பூரண நம்பிக்கை வைத்தாலேயே இன்றுள்ள பிரச்சினையைத் தீர்க்கமுடியும். இவ்வாறு தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றபின்னரே எவ்வாறான தீர்வையும் நாம் முன்வைக்க முடியும்.

தமிழ் மக்கள் மீதான யுத்தத்தினை நிறுத்த வேண்டும் என்பதையும் நாம் சகலரும் முன்னின்று கூற வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த எமது சமூகம் முன்வரவேண்டும்.

இன்று இரு சமூகங்களும் அதிகார பரவலாக்கல் தொடர்பாக இழுபறி நிலையில் இருக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கல் என்பது நாடு பிரிப்பது என்ற பொருளல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

வடக்கு-கிழக்கு மக்களின் ஆதரவு இன்றி புலிகள் தமது போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்க முடியாது. அவர்களுக்கு மக்கள் பலம் இருப்பதே போராட்டம் நடப்பதற்குக் காரணம். போராட்டத்திற்கு மக்கள் ஆதரவே பலம். எனவே வடக்கு-கிழக்கு பிரச்சினை வெறுமனே பயங்கரவாத பிரச்சினையல்ல அது மக்களின் பிரச்சினை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

இதேவேளை யுத்தத்தை நிறுத்துவதானால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை அரசு நடத்தவேண்டும் தமிழ் மக்களுக்கு தேவையான அதிகாரங்களை வழங்கவேண்டும்.

மாகாணசபைக்கு அதிகாரம் இருப்பதாக கூறினர். ஆனால் தென்மாகாணசபையில் நடந்ததைப் பார்க்கும்போது அதன் அதிகாரம் எவ்வளவு என்பதைப் புரிந்துகொள்ளமுடியும் என்றார்.

## பிரச்சினைக்கு தீர்வை அரசு முன்வைக்கவேண்டும்

### தமிழ்க் குழு தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வை விடுதலைப் புலிகள் முன்வைக்கவேண்டும் எனக்கோருவதை விட அரசு தான் என்ன தீர்வை வைத்துள்ளது என்பதை அறிவிக்க வேண்டுமென அரசுக்கு ஆதரவான தமிழ்க்குழுவின் தலைவர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஏனைய தமிழ்க்குழுக்களுடன் பேச்சு நடத்தவும் அரசு முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்களின் உரிமைக்கு தெற்கில் பாதுகாப்பு இல்லை

### மக்கள் உரிமை சட்டத்தரணி குமாரகே

(கொழும்பு)

தென் இலங்கையில் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமோ பாதுகாப்போ இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு சிறிலங்கா மக்கள் உரிமை சட்டத்தரணிகள் செயற்பாட்டு இயக்கத்தின் தலைவரான சட்டத்தரணி குமாரகே கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், எவருமே எதையும் ஏன்? எதற்கு? என்று கேட்கக் கூடிய நிலையில் இல்லை. அச்சமும், பயமுறுத்தலும் தலை தூக்கி இருப்பதால் யாரும் எதையும் தட்டிக்கேட்க முடியாத சூழ்நிலை தோன்றியிருக்கின்றது. அத்துடன் சட்டமும், ஒழுங்கு விதிகளும், அரசியல் சாசனமும் வரையப்பட்டதற்கு ஏற்ப நடைமுறையிலும் இருக்க வேண்டும். ஆனாலும் இவையாவும் முரண்பட்டவையாகவே காணப்படுகின்றது. சனநாயகம் உள்ள ஒரு நாட்டில் சகல மக்களுக்கும், எதையும் விமர்சிக்கவும் வினா எழுப்பவும் பூரண உரிமை இருக்க வேண்டும். இன்றைய நிலையில் மக்களுக்கு அத்தகைய உரிமை எதுவும்இல்லை. அதனால் உரிமைகளுடன் வாழ்வதற்குரிய வழியை மக்களே வகுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

### கண்டெடுப்பு

அல்வாய் தெற்கைச் சேர்ந்த செல்வி சுகந்தி சோமாஸ்கந்தர் என்பவரது தேசிய அடையாள அட்டையுடன் கூடிய கைப்பையொன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வடபகுதி லொறிகள் ராணுவத்தால் பறிப்பு

(வவுனியா)

வவுனியா நகரிற்குள் செல்லும் லொறிகளை இராணுவத்தினர் தமது பாவனைக்கு பெற்றுக்கொள்கின்றனர் இவ்வாறு படையினரால் பயன்படுத்தும் லொறிகள் பின் பழுதான நிலையிலேயே உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இதனால் வவுனியாவுக்கு லொறிகள் எடுத்துச் செல்ல அதன் உரிமையாளர்கள் அஞ்சுகின்றனர். வடபகுதிக்கு பொருள்களை எடுத்துவரும் லொறிகளே இவ்வாறு இராணுவத்தினரால் பயன்படுத்தப்படுகிறது.

## கடந்த ஆண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை பிரதேச சபை செயலாளர் பிரிவுக்கான மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் கடந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றிற்கான கொடுப்பனவுகளும் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள வீதித் திருத்த வேலைகளுக்கு 2,75000 ரூபாவும், கல்விக்காக 204000 ரூபாவும், பொது சுகாதார பராமரிப்பிற்கு 50,000 ரூபாவும், ஆரம்ப சுகாதார வேலைகளுக்கு 86,000 ரூபாவும், நீர்ப்பாசனத்திற்கு 1,00,000 ரூபாவும், விவசாய வேலைகளுக்கு 60,000 ரூபாவும், கால்நடை அபிவிருத்திக்கு 1,00000 ரூபாவும், நீர் விநியோகத்திற்கு 75,000 ரூபாவும், செய்முறைப் பயிற்சித் திட்டத்திற்கு 50,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள் யாவற்றிற்கும் இப்பகுதி பிரதேச செயலக அபிவிருத்தித்திட்டக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருப்பதுடன், மாவட்ட செயலகத்தினாலும், மாவட்ட இணைப்பு குழுவினாலும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (24)

**வடக்குக் கிடைக்கிறதா**

## மாகாண அலுவலகம் இல.வங்கி அமைக்கவில்லை

(கொழும்பு)

இலங்கை வங்கி தனது பணிகளை மாகாண மட்டத்தில் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாகாண தலைநகரங்களிலும் வங்கியின் மாகாண தலைமை அலுவலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்ற போதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அலுவலகங்கள் இதுவரை அமைக்கப்படவில்லை.

இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண அலுவலகம் மட்டக்களப்பிலும், வடக்கு மாகாண அலுவலகம் வவுனியாவிலும் அமைக்கப்படுமெனக் கூறப்பட்டு வவுனியாவில் ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின் போது இயங்க வைக்கப்பட்டது. ஆனால் இடம்பெயர் சேவை முடிவுக்கு வந்தபோது வங்கி அலுவலகமும் மீண்டும் கொழும்புக்கே சென்றது.

மாகாண அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் ஏற்கனவே மாவட்ட அலுவலகங்களின் கீழ் இருந்த சில அதிகாரங்களும் தலைமை அலுவலகத்திடம் இருந்த சில அதிகாரங்களும் அவற்றிடம் பாரப்படுத்தப்பட்டன. எனினும் வடக்கு கிழக்கு மாகாண அலுவலகங்கள் அமைக்கப்படாததால் ஏற்கனவே மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட சில விடயங்களுக்கும் கூட கொழும்புடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## கடலில் எடுத்த பொருள் தீச்சுவாலையுடன் வெடிப்பு

## கம்போடிய அரசின் கோரிக்கை

டத்தையும், அதற்குத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளையும் அழித்து விடவே விளைகிறது.

அதிலும், இந்திய இராணுவத்தை அழைப்பதற்கான காரணத்தை தலைவர் பிரபாகரனுடன் தொடர்புபடுத்திக் காட்டவும் முற்படுகின்றது. அதாவது, முன்னர் போல், தமிழர் பிரச்சினையுடன் இந்திய இராணுவத்தைத் தொடர்புபடுத்தாமல், தலைவர் பிரபாகரனுடனும், விடுதலைப் புலிகள் அமைப்புடனும் தொடர்புபடுத்த முற்படுவதனால் தமிழர் விவகாரம் என்பதில் இருந்து இந்தியாவையும் புறக்கணித்து வைக்கும் எண்ணம் கொண்டதாகவும் உள்ளது.

இதுஇந்திய இராணுவத்தைக் கருவியாகக் கொண்டு தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தையும், தமிழர் தலைமையையும் அழித்துவிடும் நோக்கம் கொண்டதாகும். இதன்மூலம் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அச்சாணியாகவுள்ள தலைவர் பிரபாகரனைச் சிக்க வைப்பதென்பது தமிழர் போராட்டத்தையே அழித்து விடுவதற்கு ஒப்பானது என சிறிலங்கா அரசு கருதுகின்றது. இதற்கு அண்மைக் காலம் வரை இந்தியஅரசாங்கம் கடைப்பிடித்துவரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதும் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதுமான கொள்கையானது தூண்டுதலாக இருந்திருக்கவும் கூடும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்திற்கு இராணுத்தை தற்பொழுது அனுப்புவதற்குஇல்லை என்ற இந்தியாவின் இம்முடிவானது, ஏமாற்றம் அளிக்கக் கூடியதானதொன்று என்பதில் சந்தேகம் இருக்கத்தேவையில்லை. இதேவேளை, படையனுப்ப இந்தியா விரும்பாமைக்குக் காரணம் எதைக் கூறிக்கொள்வதாக இருப்பினும், இலங்கையில் கடந்த காலத்தில் புலிகளுக்கு எதிரான போரில் பெற்ற படிப்பினையும், அதன் விளைவுகளும் இந்தியாவில் இன்று இடம்பெற்று வரும் தேசிய இனப் போராட்டங்களின் நெருக்குதலுமே பிரதான காரணங்களாக இருந்திருக்கும் என்பதைத் துணிந்து கூறலாம்.

அதாவது, பேயுடனாவது கூட்டுச் சேர்ந்து தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக்க வேண்டும் என்ற முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா வகுத்த கொள்கையில் இருந்து அரசு விடுபடுவதாகத் தெரியவில்லை. இதேவேளை, பேய்களுடன் கூட்டுச் சேருவதினால் பிரச்சினைகள் எவையும் தீர்ந்துவிடபோவதில்லை என்ற கடந்தகாலப் பாடத்தையும் சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்வதாகவோ அன்றி ஏற்றுக் கொள்வதாகவோஇல்லை. அந்தளவிற்கு பௌத்த பேரினவாதவெறி யதார்த்தத்தை அவர்கள் கண்களில் இருந்து மறைக்கின்றது.

(சென்னை)

தென் ஆற்காடு மரக்காரம் கடல் பகுதியில் 'வெடிகுண்டு ஒன்று மீனவர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு அதை கடலில் வீசியபோது அது பெரும் தீச்சுவாலையுடன் வெடித்துள்ளது.

கடலில் மிதந்து வந்த ஒரு பொருளை பிரித்து பார்த்த அம் மீனவர் அது குண்டாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தூக்கியெறிந்தபோது அது 15 அடி உயர தீப்பிளம்புடன் கடலில் வெடித்தது. இதனையடுத்து மாநில கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் கடலில் ஏதேனும் பொருள் மிதந்து வந்தால் அதை தொட வேண்டாம் எனவும் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டு இறுதிக்குள் உலகில்

# அதிக எயிட்ஸ் நோயாளர் இந்தியாவில் உருவாகுவர்

(டில்லி)

இந்த ஆண்டு இறுதிக்குள் உலகில் அதிக எயிட்ஸ் நோயாளிகள் உள்ள நாடாக இந்தியா மாறும் என இந்திய உடல்நல கழக தலைவர் கூறியுள்ளார். 1993 இல் இத்தொகை 20 லட்சமாக இருந்தது எனவும் இது இவ்வருடம் 40 லட்சமாகும் என இவர் எச்சரித்துள்ளார்.

# இஸ்ரேலின் பதிலை அமெரிக்கா எதிர்பார்ப்பு

சிரியா தெரிவித்துள்ள சமாதான யோசனை தொடர்பாக இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீனின் பதிலை எதிர்பார்த்து இருப்பதாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

ஜெனிவாவில் சிரிய அதிபர் ஆசாத்துடன் அமெரிக்க அதிபர் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக இஸ்ரேலிய பிரதமரின் சாதகமான பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் அமெரிக்க அதிபர்மேலும் குறிப்பிட்டார்

இஸ்ரேலிய படைகள் முழுவதும் உடனடியாககோலான் குன்றுப் பகுதிகளிலிருந்து மீளப் பெறப்பட வேண்டும் என்பதேசிரியாவின்நிலையாக உள்ளது.

அணுவாயுத

# தொழில்நுட்பக் கருவிகள் வடகொரியாவிற்கு விற்பனை?

ஜப்பானிலுள்ள தனியார் கம்பெனி ஒன்று வடகொரியாவுக்கு அணு ஆயுத தொழில் நுட்பக் கருவிகளை ஏற்றுமதிசெய்ததாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவிற்கு சர்வதேச அணுசக்தி பரவல் தடுப்பு உடன்பாட்டிற்குமாறாக ஜப்பான் கம்பெனி செயற்பட்டிருப்பது விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் இது தொடர்பாக ஜப்பானிய பொலிசார் விசாரணைமேற்கொண்டுள்ளனர்.

# கமரூச் இயக்கம் நிராகரிப்பு

(நொம்பென்)

கமரூச் இயக்கத்தின் கெரில்லாப் படையணிகள் கலைக்கப்படல் வேண்டுமென்று கம்போடிய அரசாங்கம் தெரிவித்த யோசனையை கமரூச் இயக்கம் நிராகரித்துள்ளது.

கமரூச் கெரில்லா இயக்கத்தின் இந்த முடிவினால், அங்கு மீண்டும் ஆயுதமோதல்களுக்கு வழி ஏற்படலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கம்போடிய அரசின் யோசனைப்படி ஒரு யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளவும் கமரூச் இயக்கம் அதன் எட்டாயிரம் பேரைக் கொண்ட படைப் பிரிவை கலைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலைமையிலேயே கெரில்லாக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவும், ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளவும் முடியுமென கம்போடிய அரசு கூறிவருகிறது. எனினும் இதனை ஒரு சூழ்ச்சிப் பொறி என்று வர்ணித்துள்ள கமரூச் இயக்கம் இந்த நிபந்தனைகளை ஏற்பதற்கும் மறுப்பு தெரிவித்துள்ளது.

# தேசியவிளையாட்டு விழா ஆரம்பம்

(டில்லி)

இந்திய தேசிய விளையாட்டுப் போட்டியின் மூன்றாவது போட்டிகள் நேற்று பூனேயிலும் பம்பாயிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. பத்துநாள் நடைபெற இருக்கும் இப்போட்டிகளை குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா ஆரம்பித்து வைத்துள்ளார் 27 விதமான விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த 5000 ற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர். துவக்க நாள்நிகழ்ச்சிகளின் போது விளையாட்டுப் போட்டியின் சின்னமான புலி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர் 12 பேர் கடற்படையால் விடுதலை

(சென்னை)

கச்சதீவு அருகே இம் மாதம் 13-ம் திகதியன்று சிறிலங்கா கடற்படையினரால் பிடித்துச்செல்லப்பட்ட தமிழக மீனவர்கள் பன்னிரண்டு பேரும் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் புகுந்து மீன் பிடித்ததாகவும், மீண்டும் இப் பிரதேசத்திற்குள் புகக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் இவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் தமிழக காவல்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

# ஜல்லிக்கட்டுப் போட்டியில் 136 பேர்வரை காயம்

(சென்னை)

மதுரைமாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் நேற்று முன்தினம் நூற்று முப்பதுக்கும் அதிகமானோர் காயமுற்றனர் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து இதற்கென வளர்க்கப்படும் கம்பீரமான பல காளைகள் கலந்து கொண்டன. இந்தக் காளைகளை வீரத்துடன் எதிர்கொண்டு அடக்கும் காட்சியைக் காண்பதற்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் இக்காட்சியைக் காண்பதற்காக வந்திருந்தனர். பலத்த காயமடைந்த பத்துப்பேர் மதுரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அகதிகள் பரிமாற்றம்

(பெர்லின்)

அகதிகள் பரிமாறுவது தொடர்பாக சுவிஸ்சர்லாந்தும் ஜேர்மனியும் இணக்கம் கண்டுள்ளன. இதன்படி ஜேர்மனி ஊடாக சுவிஸ்சர்லாந்து வந்தவர்களை ஜேர்மனிக்கு திருப்பியனுப்ப சுவிஸ் அரசு நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நீரின்றிப் போனால் நீயும் இல்லை; நானும் இல்லை

# தவறான சிகிச்சை; சிறுமி உயிரிழப்பு 50 இலட்சம் நட்டஈட்டுக்கு உத்தரவு

## சிறிலங்கா வரலாற்றில் முதல் தீர்ப்பு

கவனயீனம், தவறான சிகிச்சை காரணமாக சிறுமி ஒருவர் உயிரிழந்ததாகக்கூறி அவரது தந்தையார் தொடர்ந்த வழக்கினை அடுத்து 50 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு சிகிச்சை அளித்த வைத்தியருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுவர் நேய நிறுவனத் தலைவர் பேராசிரியர் திருமதி பிரியாணி சொய்சாவுக்கு எதிராக அரசாங்க சிரேஷ்ட வழக்கறிஞர் நியன்சி அரசகுலரட்ன தாம் தொடர்ந்த வழக்கில் வெற்றி பெற்றுள்ளார். அரசகுலரட்னவுக்கு 50 லட்சம் ரூபா நஷ்டஈட்டையும் வழக்குச் செலவையும் செலுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிபதி திருமதி பிரியாணி சொய்சாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிகிச்சைக்காக பிரதிவாதியிடம் ஒப்படைத்த சுஹானி எனும் தனது நான்கு வயது மகள் பிரதிவாதியின் தவறான நோய் கண்டுபிடிப்பு கவலையீனம் காரணமாக உயிரிழந்ததாக அரசகுலரட்ன நீதிமன்றில் முறையிட்டிருந்தார். இச்சிறுமி 1992 ஏப்ரலில் டாக்டரிடம் ஒப்படைக்கப்பட்டு ஜூன் மாதம் காலமானார். தனது மகளின் மரணம் காரணமாக தாம் அனுபவிக்க நேர்ந்த மனவேதனை, உடல் பலவீனம் என்பவற்றிற்காக இத்தந்தை டாக்டர் பிரியாணியிடம் 50 லட்சம் ரூபா நட்டஈடு கோரியிருந்தார்.

இலங்கை நீதித்துறை வரலாற்றில் இத்தகைய தோர் வழக்கு இறுதிவரை விசாரிக்கப்பட்ட முதல் சம்பவம் இதுவெனக் கூறப்படுகிறது. இவ்வழக்கு பல மாதங்களாக விசாரிக்கப்பட்டது.


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

17-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 261

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
27-5449, 27-5187, 40-7583, 40-2249, 42-1722
26-0407, 41-9166, 26-5157, 24-5574, 26-3068
24-2680.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
41-8617, 26-3937, 27-8155, 27-7740, 24-5437
24-4265, 26-3177, 24-5119, 22-6468, 27-5822
24-0916, 42-3368.



### யாழ். மாவட்டத்தில் புதிய படங்கள் தருவித்து விநியோகிக்கும் வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கு:-

19-01-1994 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு கலை ஊடக இணைய காரியாலயத்தில் யாழ் மாவட்டத்திற்குள் புதிய படங்கள் தருவித்து விநியோகிக்கும் வீடியோ நாடா விநியோகஸ்தர்களின் கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால் இதில் சம்பந்தப்பட்ட வீடியோ நாடா விநியோகஸ்தர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

செயலாளர்:
**கலை ஊடக இணையம்**
117, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி,
(சி-8402) யாழ்ப்பாணம்.



### பிற்போடப்பட்டுள்ளது

07. 01. 1994 ஆரம்பமாக இருந்த கலைப்பீட இரண்டாம் தவணையானது 17. 01. 1994 க்குப் பிற்போடப்பட்டதனால் யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் 19. 01. 1994 புதன்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பினைப் பிற்போடப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே இச் சீட்டிழுப்பானது மீண்டும் எதிர்வரும் 16. 02. 1994 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.


### ஆதாரம் காட்டி பெறவும்

(தொல்புரம்)

இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளைக் கணக்கில் உள்ள காசோலை, ஒன்று சண்டிலிப்பாய் சிரணிச் சந்தியில் இ. விஜயராணி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காசோலைக்குரியவர் ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (41)

### கூட்டம்

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று மாலை 2.00 மணிக்கு யா-அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

### கைலாசபதி அரங்கில் பொய்க்கால்

யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் வழங்கும் பொய்க்கால் என்னும் நாடகம் நாளை புதன்கிழமையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் பிற்பகல் 4 30 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

## 1995ஆம் ஆண்டுமுதல் புதிய பல்கலை அனுமதி முறை

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதி முறையை மாற்றி அமைப்பது சம்பந்தமான கமிட்டிக்கு இதுவரை 500ற்கு மேற்பட்ட எழுத்துமூலமகஜர்கள்கிடைத்துள்ளன. இவற்றில் பல்வேறுபட்ட யோசனைகள் அடங்கியுள்ளன.

தற்போதைய அனுமதி முறையை மாற்றி நியாயமான முறையை அமுலாக்கும் வகையில் இக்கமிட்டி நியமிக்கப்பட்டது, இக்கமிட்டி சிபார்சுகள் அடங்கிய அறிக்கையை இம்மாத இறுதியில் அரசிடம் சமர்ப்பிக்கும். இந்தச் சிபார்சுகள் 1995ஆம் ஆண்டு முதல் அமுலாக்கப்படும்.

## தேசிய பாடசாலைகளில் கூடுதல் வகுப்புகள்

(கொழும்பு)

பிரபல பாடசாலைகளில் கூடுதலான மாணவர்களுக்கு இடமளிக்கும்வகையில் தேசிய பாடசாலைகளின் வகுப்பறை வசதிகள் அதிகரிக்கப்படவுள்ளன

ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் மேலதிகமாக இரண்டு வகுப்புக்கள் வீதம் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால் ஆயிரத்திற்கும் கூடுதலான மாணவர்க்கு தேசியப் பாடசாலைகளில் இடம் கிடைக்கும். ஆண்டுதோறும் பிரபல பாடசாலைகளில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் அதிகரிக்கப்படுகிறது. இதன் மூலம் தெரிவான மாணவர்களை சேர்க்க ஏற்கனவே தெற்கில் ஏழு தேசியப் பாடசாலைகளில் புதிய வகுப்பறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன இதற்கான தளபாடங்கள் ஆசிரிய தேவை என்பவற்றைப் பூர்த்தி செய்ய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### இலவச ஆங்கில வகுப்பு

(தொல்புரம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி மேற்கு சங்கானை

# மதுரை நகரில் புலிகள் ஊடுருவல் காங்கிரஸ் தலைவர் எச்சரிக்கை

(சென்னை)

மதுரை நகரினுள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாக தமிழக எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியன் குற்றஞ்சாட்டியுள்ளார். நேற்று மதுரையில் செய்தியாளரிடையே பேசிய அவர் விடுதலைப்புலிகளின் மூன்று பேர் மதுரையினுள் ஊடுருவியிருப்பதாக தமக்கு தகவல்கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகள் எந்நேரத்திலும் தாக்குதலில் ஈடுபடலாம் எனவும் அவர் எச்சரித்தார். விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் இருப்பதாக தமிழக புலனாய்வுத்துறை எச்சரித்ததும் அதனால் தமிழக ஆளுநரின் தஞ்சாவூர் விஜயம் ரத்தானதும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது எனத் தாம் முன்பு கூறியதை உறுதி செய்வதாகவும் பாலசுப்பிரமணியன் தெரிவித்தார்.

# தென் மாகாணசபைத் தேர்தலில் எதிரணிகள் இணைந்து போட்டி

(கொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ஒன்றிணைந்து கதிரைச் சின்னத்தில் போட்டியிடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது

எதிரணி சார்பில் போட்டியிடுவோரின் பெயர்ப்பட்டியலைத்தயாரிப்பதற்காக ஐந்து பேர்களை உள்ளடக்கிய குழு ஒன்றும்அமைக்கப்பட்டுள்ளது

இச்குழுவில் பொதுஜன ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதான செயலாளர் டி.எம் ஜயரத்ன, எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் ரிச்சர்ட் பத்திரன, முன்னாள்தென்மாகாண சபை முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட, மஹிந்த ராஜபக்ஸ, மங்கள சமரவீர ஆகியோர் உள்ளடங்குவார்கள் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

### தேர்தல் நியமனப்பத்திரம்

தென்மாகாணசபை தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. பெப்ரவரி 22ஆம் திகதி நண்பகல் 12. 00மணிவரை நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலத்தியோன் தருவிக்க யாழ். மாநகரசபை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை கொழும்பில் இருந்து மலத்தியோன் தருவிக்க நடவடிக்கைஎடுத்து வருவதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

தற்சமயம்யாழ்ப்பாணத்தில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து வருவதனால் நுளம்புப் பெருக்கத்தை ஓரளவேனும் கட்டுப்படுத்து முகமாகயாழ். மாநகர சபை இந் நடவடிக்கையை எடுத்து வருகின்றது.

மேலும் மையப்படுத்தப்பட்டிருந்த மலேரியா தடுப்பு இயக்கம் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் தோறும் பரவலாக்கப்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

### வவுச்சர் வந்தது

ஜனவரி மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் றுகுணு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. (நி)

## கொழும்பு களஞ்சியத்தில் மலத்தியோன் இல்லை

யாழ் குடாநாட்டில்மேலும் மலேரியா நோய் பரவும் அபாயம்ஏற்பட்டுள்ளது. மலேரியா நோய் நுளம்பை அழிப்பதற்கான மலத்தியோன் மருந்து கொழும்புப் பண்டகசாலையில் கையிருப்பில் இல்லையெனவும், யாழ். குடாநாட்டிற்குத் தேவையான மலத்தியோனை அனுப்பமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொள்ளையர் கைது

கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் சுமார் 13 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட ஐவர் கைதாகியுள்ளனர். இவர்களில் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர் எனவும் மற்றுமொருவர் விமானப் படையிலிருந்து தப்பிவந்தவர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

### 'வாதுவ' தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

''வாதுவ' பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேருவது மேலும் சில தினங்கள் தாமதமாகலாம் என கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

''வாதுவ'' கப்பலில் இன்னும் 30க்கு மேற்பட்டலொறிகளில் இருந்து பொருள்கள்


### பிற்போடப்பட்டுள்ளது

19-01-1994 நாளை நடைபெறவிருந்த செ. கோபாலகிருஸ்ணன் மஞ்சுளா அவர்களின் பூப்புனித நீராட்டு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்பட்டுள்ளது. எனவே இச் சீட்டிழுப்பானது மீண் டும் எதிர்வரும் 16.02.1994 புதன்கிழமை பிற்ப கல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

(7259) சமூக விஞ்ஞான மன்றம்.

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 — 06 — 1974



வீரச்சாவு 18 — 01 — 1993

## வீரவேங்கை இளவேனில் (துஷான்)

(தில்லையம்பலம் ரவிதரன்)

தம்பலகாமம் திருமலை

தாய்மண் காக்கவென அண்ணன் வழி வந்தாய்
குடும்பத்தாரை மறந்தாய் உயிர்மூச்சாய்
உழைத்தாய்
புகைப்படத்துறையிலே உன் திறமையை
வெளியிட்டாய்
அஞ்சா நெஞ்சுரம் கொண்டு பகைவனை சரித்தாய்
நண்பனுக்கு நண்பனாக எம்மோடு பழகி
துஷான் என்னும் உன்நினைவலைகளை
எம்மீது சுமத்திவிட்டு எம்நெஞ்சை விட்டு
பிரியாமல் பிரிந்தாயே ......

(சி-8403) -போராளிகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

சாலைகளில் இடம் கிடைக் கும். ஆண்டுதோறும் பிரபல பாடசாலைகளில் சேர்வதற் கான விண்ணப்பங்கள் அதி கரித்து வருகிறது.

இவர்களின் தூரம் மற்றும் சொற்ப சலுகையீனங்கள் காரணமாக தமது பிள்ளை களைச் சேர்க்க முடியாத பல பெற்றோரின் மேல் முறை யீடுகள் தற்போது பரிசீலிக்

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையா ட்டு அபிவிருத்திக்குழுவினால் நடாத்தப்படும் வலயரீதியில் தெரிவுசெய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கிடையி லான மாவட்ட மட்ட உதை பந்தாட்டப் போட்டிகளில் இன்று மாலை 3.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத் துவபீட மைதானத்தில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மந்துவில் மரிக்கார் விளையாட்டுக்கழ கம் மோதும்.

## கேணல் கிட்டு

திரு. அல்வின் தலைமையில் ஆரம்பமானது.

பிரதான ஈகைச்சுடரை மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செபமாலை ஏற்றிவைத் தார். இதன்போது மக்கள் சார்பில் திரு. பத்தன், திரு. சௌந்தரநாயகம் கோமா ஆகியோர் உரைநிகழ்த்தினர். போராளிகள் சார்பில் மாவ ட்ட மாணவரமைப்புதுணைப் பொறுப்பாளர் திரு. ரவிராஜ் மற்றும் மாவட்ட அரசியல் துணைப்பொறுப்பாளர் திரு. நந்தகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## இல.

12 மாவட்டங்களில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் நிவாரணப் பணிகளை மேற் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இங்கு விரிவான முறையில் ஆராயப்பட்டது.

(தொல்புரம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி மேற்கு சங்கானை உதவி அரச அதிபர் பிரிவின் மாவடி, வட்டுக்கோட்டை அலுவலகத்தினால் இலவச ஆங்கிலப் பாட வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி இலவச வகுப்பு கள் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் மாலை 3.00 மணி முதல் 5 30 மணி வரையும் இடம் பெறவுள்ளதெனவும், ஆங்கிலம் கற்க ஆர்வமுடை யோர் இன்று காலை 10.00 மணிக்கு மாவடி அலுவலகத் தில் சமுகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது (41)

## வீரச்சாவு

புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற நேரடி மோதலின் போது விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்

வீரச்சாவடைந்த லெப்டி னன்ட் வெற்றிவேல் (மாணி க்கராசா ஜெயராசா - பாண் டிருப்பு 1-ம் குறிச்சி அம் பாறை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக் கொள் கின்றனர்.

## சூரியகந்த

மீட்கப்பட்ட எலும்புக்கூடு கள் 1988,1989 காலப்பகுதி யில் ஜே. வி. பியினரால் கொல்லப்பட்டவர்களுடை யது எனவும் சி ஐ டி வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

## கிழக்கில்

யிட வேண்டாம் என்று அச் சுறுத்தியுள்ளனர்.

இதைத்தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ள னர். கிழக்கு மாகாணத்தின் கேந்திர நிலையங்களிலும், நகரப்பகுதியிலும் இவர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர் என தெரியவருகிறது.

செய்திகள் தெரிவிக்கின்றன.

''வாதுவ'' கப்பலில் இன் னும் 30க்கு மேற்பட்ட லொறி களில் இருந்து பொருள்கள் ஏற்றவேண்டியிருப்பதே கப்ப லின் தாமதத்திற்கு காரணம் என அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## அரச அதிபர் கொழும்பு பயணம்

(வடமராட்சி)

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்புக்கு நேற்று புறப்ப ட்டுச் சென்றார். பருத்தித் துறை துறைமுகத்தில் தரித்து நின்ற 'றுகுணு' கப்பல் மூலம் பலாலிக்குச் சென்ற இவர் அங்கிருந்து விமானம் மூலம் சென்றடை ந்தார். இவருடன் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும் சென்றனர். (யோ)

## மாணவருக்கான

முழுவதற்குமுள்ள சகலபாட சாலைகளிலும் கல்விபயிலும் மாணவருக்கு சீருடைவழங்க 65 கோடி செலவாகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

## றுகுணு

திருத்தத்திற்கென சீமெந்து 350 பைக்கட்டும், அஸ்பெஸ் டஸ் சீற், 800 மெட்றிக் தொன் உரம் மற்றும் உணவு முத்திரைகள் பலவும் எடுத்து வரப்பட்டன. மேற்குறித்த உர வகைகளில் 700 மெட்றிக் தொன் தனியாருக்கு வந்து ள்ளது.

இக்கப்பலில் கல்வித் திணை க்களத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியும், யாழ். மாநகர சபை அலுவலகத்தைச் சேர் ந்த ஒரு அதிகாரியும் வந்த னர். கப்பலில் இருந்து பொரு ள்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. (யோ)

நீராட்டு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: பின்னர் அறிவிக்கப்படும்.

மாலியவத்தை சங்கானை.

(7260)

தகவல்: செ. கோபாலகிருஸ்ணன் குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி உயர்தர மாணவ ஒன்றியத்தின் தலைவர் செல்வன் **ஆனந்தவேல்** அவர்களின் தந்தையார் **சிவசுப்பிரமணியம்** அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

-உயர்தர மாணவ ஒன்றியம்

யாழ்ப்பாணம் இந்து கல்லூரி,
யாழ்ப்பாணம்.
18.01.94 (7255)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

காரைநகர் மொந்திபுலத்தைப் பிறப்பிடமாக வும், 136|2 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித் தவருமான நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் (உரிமை யாளர், கலைவாணி நகைமாளிகை) 17-01-94 இல் காலமானார். இவர் ரஞ்சினியின் அன்புக் கணவரும், கலைவாணி, பவானி, ஆனந்தவேல், நளினி ஆகி யோரின் அன்புத் தந்தையும், தனபாலன் ஜெயகாந் தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலனின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை கள் அவரது இல்லத்தில் இன்று 18-01-94 காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

136 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(7258)

தகவல்: சி. ஆனந்தவேல் மகன்